**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW10 (PW8) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade-I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.கணேசன் | Father's Name | : | திரு. சின்னதம்பி. |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1-A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் மாவத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன் . கார்னேசன் என்பவரை எனக்கு தெரியாது. சுமார் 6-7 வருடங்களுக்கு முன்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு ஏதும் தெரியாது என்று சொன்னேன் . யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் தெரியாது . யார் அடித்தார் என்ற விவரமும் தெரியாது. போலீசாரிடம் யார் யாரிடம் சண்டை போட்டார்கள் என்ற விவரத்தை நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் போலீஸ் விசாரணையின் போது கடந்த 22.03.2019 அன்று மதியம் 2.00 மணியளவில் தமிழரசன் வீட்டின் அருகே இருந்தபோது கார்னேசன், விஜயகுமார், சண்முகம், சக்கரவர்த்தி ஆகியோர் மோனிகா காணாமல் போனது சம்பந்தமாக காந்தியின் மகன் தமிழரசனை

தேடிவந்தபோது ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்துக்கொண்டு கார்னேசன், விஜயகுமார், சண்முகம், சக்கரவர்த்தி ஆகியோர்களை பயங்கரமான ஆயுதங்களை கொண்டு தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் , அவர்கள் கொண்டுவந்த வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும் , சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நாங்களும் சமாதானமாகி விட்டபப்படியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:12 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW9 (PW7) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.மாதேஷ் | Father's Name | : | திரு.பொன்னன் (எ) ராமகவுண்டர். |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1–A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் மாவத்தூரில் குடி இருக்கிறேன் . பால் சென்டர் வைத்துள்ளேன் . சாட்சி சிவகுமார் என்னுடைய பங்காளி . 2019 வருடம் போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு நான் போய் இருந்தேன் . அப்பொழுது போலீசார் உங்கள் ஊரில் பிரச்சனை நடந்தது தெரியுமா என்று கேட்டார் நான் தெரியாது என்று சொன்னேன். என்னை சாட்சியாக இருக்கும்படி சொன்னார்கள் , நான் எனக்கு சம்பவ விவரம் தெரியாது என்று சொன்னேன் , என்னை கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன் . பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் **Ex.P.4** ஆகும். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . அது **Ex.P.5** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

போலீஸ் விசாரணையில் கடந்த 23.03.2019 அன்று காலை 7.00 மணியளவில் போலீசார் , சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள் என்றும் , அந்த பார்வை மகஜரில் நானும் , சிவக்குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் , அதேநாள் காலை 8.30 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தில் இருந்து இரும்பு பைப் 5, இரும்பு ராடு 5, கத்தி ஒன்று, கல் ஒன்று, ஹூண்டாய் வாகனம் ஒன்று , மகேந்திரா பொலிரோ வாகனம் ஒன்று ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றறினார்கள் என்றும் , அதிலும் நானும் சிவக்குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:19 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW8 (PW6) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சிவகுமார் | Father's Name | : | திரு.அப்புனு |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1–A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் மாவத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன் . கார்னேசன் எந்த ஊரை சேர்ந்தவர் , யார் என்ற விவரம் தெரியாது . நான் கையெழுத்தை தமிழில் தான் போடுவேன். தற்போது காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடைய தான் . அந்த கையெழுத்தை நான் போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் . பார்வை மகஜரிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் **Ex.P.2** ஆகும். தற்போது காண்பிக்கப்படும் ஆவணத்திலுள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் **Ex.P.3** ஆகும். ஊரில் சண்டை , பிரச்சனை என்று சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் , யார் யாருக்கு சண்டை , பிரச்சனை என்ற விவரம் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

போலீஸ் விசாரணையில் கடந்த 23.03.2019 அன்று காலை 7.00 மணியளவில் போலீசார் , சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள் என்றும் , அந்த பார்வை மகஜரில் நானும் , மாதேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் , அதேநாள் காலை 8.30 மணியளவில் போலீசார் சம்பவஇடத்தில் இருந்து இரும்பு பைப் 5, இரும்பு ராடு 5,கத்தி ஒன்று , கல் ஒன்று , ஹூண்டாய் வாகனம் ஒன்று , மகேந்திரா பொலிரோ வாகனம் ஒன்று ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றறினார்கள் என்றும் , அதிலும் நானும் மாதேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை: இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:26 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW5 (PW5) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.மணி | Father's Name | : | திரு.மாது |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1–A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் தர்மபுரி மாவட்டம் , காரிமங்கலம் தாலுக்கா , கீரியூரில் வசிக்கிறேன். கார்னேசன் என்னுடைய மாமா , கார்னேசனுக்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் இரண்டு பிள்ளைகள் பெயர் மட்டும் தெரியும் , மோனிகா, சௌமியா அந்த இரண்டு பெண் பிள்ளைகள் . சுமார் 5 வருடம் முன்பாக என்னுடைய மாமா கார்னேசன் என்னை அழைத்துக்கொண்டு மாவத்தூர் கிராமத்திற்கு போய் இருந்தோம் . என் மாமா கார்னேசனை விட்டுவிட்டு எனக்கு போன் வந்ததால் நான் திருப்பி வந்துவிட்டேன் . யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் தெரியாது . யார் அடித்தார்கள் என்ற விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

போலீஸ் விசாரணையின் போது கடந்த 21.03.2019 அன்று காலை 10.00 மணிக்கு கார்னேசன் மகள் மோனிகா வேலைக்கு போய்விட்டு வருவதாக போனவர் திரும்ப வீட்டுக்கு வரவில்லை என்றும் , இது சம்பந்தமாக விசாரித்தபொழுது மாவத்துகிராமத்தை சேர்ந்த காந்தி மகன் தமிழரசன் என்பவர் அழைத்துச்சென்றதாக தெரியவந்தது என்றும் , இது சம்பந்தமான போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு வரும்படி சென்னதன்பேரில் நானும் , எங்கள் ஊரை சேர்ந்த மயில்சாமி, புவனேசன், கோவிந்தன், நாராயணசாமி, சரவணன், சண்முகம், சத்தியமூர்த்தி, மணி, சம்பத், சக்கரவர்த்தி, விக்னேஷ் ஆகியோர் இரண்டு போலிரோ வேனிலும் , இரண்டு பிக்கப் வண்டியிலும் புறப்பட்டோம் என்றும் , அதன்பிறகு தொலைபேசியில் தகவல் வந்தன் அடித்து அங்கு போகாமல் 23.03.2019 அன்று மதியம் 2.00 மணிக்கு தமிழரசன் வீட்டிற்கு சென்றோம் என்றும் , அப்பொழுது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றும் , கார்னேசன் மகள் மோனிகாவும் , தமிழரசனும் எங்கே என்று கேட்டபொழுது ஆஜர் எதிரிகள் தன் கையில் இருந்த பயங்கர ஆயுதங்களை கொண்டு எங்களை தாக்கினார்கள் என்றும் , இதில் எனக்கும் , கார்னேசன் சண்முகம் , சக்கரவர்த்தி ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் , நாங்கள் சென்ற ஹூண்டாய் சாண்ட்ரோ வாகனம் TN–02–6009 என்ற வாகனத்தையும். பொலிரோ மேக்ஸ் டிரக் வாகன்ம TN–29BU 7316 என்ற வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும் சேத மதிப்பு 3 இலட்சம் என்றும், அடிப்பட்ட நாங்கள் போச்சம்பள்ளி மருத்துவமனையில் பெட்டில் அனுமதிக்கப்பட்டோம் என்றும், இது சம்பந்தமாக புகார் வாக்குமூலம்

கார்னேசன் கொடுத்தார் என்றும் , இந்த விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளும் நாங்களும் சமாதானமாகிவிட்டப்படியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:33 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW4 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade-I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சக்கரவர்த்தி | Father's Name | : | திரு.சிவபெருமாள் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | | |

**Accused: A1-A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுக்கா, எர்ரனஹள்ளி அஞ்சல், தலைவாய்ஹள்ளி கிராமத்தில் வசிக்கிறேன் . நான் சென்ரிடிங் வேலை செய்கிறேன். கார்னேசன் என் தாய்மாமன் . அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் , இரண்டு பெண் பிள்ளைகள் . அவர்கள் பெயர் மோனிகா , சௌமியா, மனோஜ் குமார் , பாரத் ஆவார்கள். மோனிகா நர்சிங் முடித்துவிட்டு தங்கம் மருத்துவமனையில் நர்சாக பணிபுரிந்தார் . என்னுடைய மாமா கார்னேசன் எனக்கு போன் செய்து மோனிகா காணாமல் போனதாக எனக்கு தகவல் கொடுத்தார் . போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு வரும்படி அழைத்தார். நான் இருசக்கர வாகனத்தில் போச்சம்பள்ளி வந்துவிட்டு அங்கு இருந்து பக்கத்தில் ஒரு கிராமத்திற்கு வரச்சொன்னார் நானும் போய் இருந்தேன். ஏற்கனவே சண்டை ஏற்பட்டு பிச்சனை முடிந்திருந்தது . அங்கு இருந்து என் மாமா என்னை அனுப்பி வைத்துவிட்டார் , யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை

விசாரிக்கவில்லை. எனக்கு இந்த சம்பவத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின் போது கடந்த 21.03.2019 அன்று காலை 10.00 மணிக்கு கார்னேசன் மகள் மோனிகா வேலைக்கு போய்விட்டு வருவதாக போனவர் திரும்ப வீட்டுக்கு வரவில்லை என்றும் , இது சம்பந்தமாக விசாரித்தபொழுது மாவத்தூர் கிராமத்தை சேர்ந்த காந்தி மகன் தமிழரசன் என்பவர் அழைத்துச்சென்றதாக தெரியவந்தது என்றும் , இது சம்பந்தமான போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு வரும்படி சென்னதன்பேரில் நானும் , எங்கள் ஊரை சேர்ந்த மயில்சாமி, புவனேசன், கோவிந்தன், நாராயணசாமி, சரவணன், சண்முகம், சத்தியமூர்த்தி, மணி, சம்பத், சக்கரவர்த்தி, விக்னேஷ் ஆகியோர் இரண்டு பொலிரோ வேனிலும் , இரண்டு பிக்கப் வண்டியிலும் புறப்பட்டோம் என்றும் , அதன்பிறகு தொலைபேசியில் தகவல் வந்ததை அடித்து அங்கு போகாமல் 23.03.2019 அன்று மதியம் 2.00 மணிக்கு தமிழரசன் வீட்டிற்கு சென்றோம் என்றும் , அப்பொழுது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றும் , கார்னேசன் மகள் மோனிகாவும் , தமிழரசனும் எங்கே என்று கேட்டபொழுது ஆஜர் எதிரிகள் தன் கையில் இருந்த பயங்கர ஆயுதங்களை கொண்டு எங்களை தாக்கினார்கள் என்றும், இதில் என்னையும், கார்னேசன் சண்முகம்,

சக்கரவர்த்தி ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் , நாங்கள் சென்ற ஹூண்டாய் சாண்ட்ரோ வாகனம் TN-02-6009 என்ற வாகனத்தையும். பொலிரோ மேக்ஸ் டிரக் வாகனம் TN-29-BU 7316 என்ற வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும் சேத மதிப்பு 3 இலட்சம் என்றும், அடிப்பட்ட நாங்கள் போச்சம்பள்ளி மருத்துவமனையில் பெட்டில் அனுமதிக்கப்பட்டோம் என்றும் , இது சம்பந்தமாக புகார் வாக்குமூலும் கார்னேசன் கொடுத்தார் என்றும் , இந்த விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளும் நாங்களும் சமாதானமாகி விட்டப்படியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:43 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW3 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சண்முகம் | Father's Name | : | திரு.மாரிமுத்து |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1–A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் தர்மபுரி மாவட்டம் , காரிமங்கலம் தாலுக்கா , கெஜனநாயக்கனஹள்ளி என்ற இடத்தில் வசித்து வருகிறேன் . விவசாயம் செய்து வருகிறேன் . கார்னேசன் எனக்கு பங்காளி முறை வேண்டும் . கார்னேசனுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். அவர்கள் பேர் தெரியாது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக கார்னேசன் அவருடைய பெரிய மகள் காணாமல் போனது சம்பந்தமாக மாவத்தூர் என்ற இடத்திற்கு போய் இருந்தோம், அந்த இடத்தில் கூட்டமாக இருந்தார்கள். அவர்கள் எங்களை நோக்கி ஓடி வந்தார்கள் , நான் கீழே விழுந்துவிட்டேன் அதனால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது . சுமார் 50–100 நபர்கள் ஓடிவந்தார்கள். நான் கீழே விழுந்ததால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. யார் ஓடி வந்தார்கள் என்னால் அடையாளம் சொல்ல முடியவில்லை, அவர்கள் பெயர் தெரியாது. அவ்வாறு ஓடி வந்த நபர்கள் யாரேனும் நீதிமன்றத்தில் தற்போது உள்ளார்களா என்பது எனக்கு தெரியாது. அடிப்பட்டதற்கு போச்சம்பள்ளி

மருத்துவமனைக்கு போய் இருந்தேன் அங்கு இருந்து தர்மபுரி ஜி .எச்–க்கு அனுப்பிவிட்டார்கள். இந்த சம்பவத்தின் போது வேறு யாருக்கும் காயம் ஏற்பட்டது என்ற விவரம் தெரியாது . யார் புகார் கொடுத்தார்கள் என்று சொன்னால் யாரும் புகார் கொடுக்கவில்லை . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–**

போலீஸ் விசாரணையின் போது கடந்த 21.03.2019 அன்று காலை 10.00 மணிக்கு கார்னேசன் மகள் மோனிகா வேலைக்கு போய்விட்டு வருவதாக போனவர் திரும்ப வீட்டுக்கு வரவில்லை என்றும் , இது சம்பந்தமாக விசாரித்தபொழுது மாவத்தூர் கிராமத்தை சேர்ந்த காந்தி மகன் தமிழரசன் என்பவர் அழைத்துச்சென்றதாக தெரியவந்தது என்றும் , இது சம்பந்தமான போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு வரும்படி சென்னதன்பேரில் நானும் , எங்கள் ஊரை சேர்ந்த மயில்சாமி, புவனேசன், கோவிந்தன், நாராயணசாமி, சரவணன், சண்முகம், சத்தியமூர்த்தி, மணி, சம்பத், சக்கரவர்த்தி, விக்னேஷ் ஆகியோர் இரண்டு பொலிரோ வேனிலும் , இரண்டு பிக்கப் வண்டியிலும் புறப்பட்டோம் என்றும் , அதன்பிறகு தொலைபேசியில் தகவல் வந்ததை அடித்து அங்கு போகாமல் 23.03.2019 அன்று மதியம் 2.00 மணிக்கு தமிழரசன் வீட்டிற்கு சென்றோம் என்றும் , அப்பொழுது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றும் , கார்னேசன் மகள் மோனிகாவும், தமிழரசனும் எங்கே என்று கேட்டபொழுது ஆஜர்

எதிரிகள் தன் கையில் இருந்த பயங்கர ஆயுதங்களை கொண்டு எங்களை தாக்கினார்கள் என்றும் , இதில் எனக்கும் , கார்னேசன் சண்முகம் , சக்கரவர்த்தி ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், நாங்கள் சென்ற ஹூண்டாய் சாண்ட்ரோ வாகனம் TN-02-6009 என்ற வாகனத்தையும். பொலிரோ மேக்ஸ் டிரக் வாகனம் TN-29-BU 7316 என்ற வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும் சேத மதிப்பு 3 இலட்சம் என்றும், அடிப்பட்ட நாங்கள் போச்சம்பள்ளி மருத்துவமனையில் பெட்டில் அனுமதிக்கப்பட்டோம் என்றும் , இது சம்பந்தமாக புகார் வாக்குமூலம் கார்னேசன் கொடுத்தார் என்றும் , இந்த விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளும் நாங்களும் சமாதானமாகி விட்டப்படியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:52 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW2 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade-I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.விஜயகுமார் | Father's Name | : | திரு.பழனி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1-A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**முதல் விசாரணை:**

நான் தர்மபுரி மாவட்டம் , காரிமங்கலம் தாலுக்கா , ஜோலம்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். அ.சா.1 கார்னேசன் என் தாய் மாமன் ஆவார். என் தாய் மாமனுக்கு இரண்டு மகள்கள் முதல் மகள் பெயர் மோனிகா , அவர் நர்சிங் முடித்து தர்மபுரி உள்ள தனியார் மருத்துவமனையில் நர்ஸ் -சாக பணிபுரிந்தார். மேற்படி மோனிகா 5 1/2 வருடம் முன்பு காணாமல் போய்விட்டார். அவரை தேடிக்கொண்டு நாங்கள் போய் இருந்தோம். நாங்கள் மாவத்தூருக்கு போய் இருந்தபோது அடித்துவிட்டார்கள் . அதில் எனக்கும், கார்னேசன், சண்முகம் ஆகியேருக்கு காயம் ஏற்பட்டது . கூட்டத்தில் இருந்த நபர்கள் அடித்துவிட்டார்கள். அந்த கூட்டத்தில் சுமார் 40 நபர்கள் இருந்தார்கள். குறிப்பிட்டு யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது . என்னை அடித்தவர்கள் யாரும் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை . அடிப்பட்ட நான் , கார்னேசன் , சண்முகம் ஆகியோர் தர்மபுரி ஜி .எச்-க்கு சிசிக்சைக்காக போய் இருந்தோம். அடிப்பட்டது சம்பந்தமாக யார் புகார்

கொடுத்தார்கள் என்று தெரியாது .என்னை போலீசார் விசாரித்தபோது கூட்டத்தில் இருந்து நபர்கள் அடித்துவிட்டதாக தான் நான் வாக்குமூலம் கொடுத்தேன்.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–**

போலீஸ் விசாரணையின் போது கடந்த 21.03.2019 அன்று காலை 10.00 மணிக்கு கார்னேசன் மகள் மோனிகா வேலைக்கு போய்விட்டு வருவதாக போனவர் திரும்ப வீட்டுக்கு வரவில்லை என்றும் , இது சம்பந்தமாக விசாரித்தபொழுது மாவத்தூர் கிராமத்தை சேர்ந்த காந்தி மகன் தமிழரசன் என்பவர் அழைத்துச்சென்றதாக தெரியவந்தது என்றும் , இது சம்பந்தமான போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு வரும்படி சென்னதன்பேரில் நானும் , எங்கள் ஊரை சேர்ந்த மயில்சாமி, புவனேசன், கோவிந்தன், நாராயணசாமி, சரவணன், சண்முகம், சத்தியமூர்த்தி, மணி, சம்பத், சக்கரவர்த்தி, விக்னேஷ் ஆகியோர் இரண்டு பொலிரோ வேனிலும் , இரண்டு பிக்கப் வண்டியிலும் புறப்பட்டோம் என்றும் , அதன்பிறகு தொலைபேசியில் தகவல் வந்தன் அடித்து அங்கு போகாமல் 23.03.2019 அன்று மதியம் 2.00 மணிக்கு தமிழரசன் வீட்டிற்கு சென்றோம் என்றும் , அப்பொழுது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றும் , கார்னேசன் மகள் மோனிகாவும் , தமிழரசனும் எங்கே என்று கேட்டபொழுது ஆஜர் எதிரிகள் தன் கையில் இருந்த பயங்கர ஆயுதங்களை கொண்டு எங்களை தாக்கினார்கள் என்றும், இதில் எனக்கும், கார்னேசன் சண்முகம்,

சக்கரவர்த்தி ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் , நாங்கள் சென்ற ஹூண்டாய் சாண்ட்ரோ வாகனம் TN-02-6009 என்ற வாகனத்தையும். பொலிரோ மேக்ஸ் டிரக் வாகனம் TN-29-BU 7316 என்ற வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும் சேத மதிப்பு 3 இலட்சம் என்றும், அடிப்பட்ட நாங்கள் போச்சம்பள்ளி மருத்துவமனையில் பெட்டில் அனுமதிக்கப்பட்டோம் என்றும் , இது சம்பந்தமாக புகார் வாக்குமூலம் கார்னேசன் கொடுத்தார் என்றும் , இந்த விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளும் நாங்களும் சமாதானமாகி விட்டப்படியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு . மோனிகா மாவத்தூரிலுள்ள காந்தி மகன் தமிழரசன் உடன் தான் தற்போது வாழ்ந்து வருகிறார் என்றால் சரி.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை</u>

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:51:59 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 49 of 2023**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.கார்னேசன் | Father's Name | : | திரு.கோவிந்தசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused: A1–A14 ,A16,A17,A18 present. and A15 died.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், கீரியூரில் வசிக்கிறேன். என் மனைவி பெயர் ஜானகி , எனக்கு ஆண் பிள்ளை இரண்டு , பெண் பிள்ளைகள் இரண்டு, ஆண்பிள்ளைகள், மனோஜ், பரத், பெண் பிள்ளைகள் பெயர் மோனிகா , சௌமியா ஆவார்கள். என்னுடைய மகள் மோனிகா தர்மபுரியிலுள்ள தனியார் மருத்துவமனையில் நர்ஸ்சாக வேலை செய்து வந்தார். வேலைக்கு போன என் மகள் மோனிகாவை பெயர் தெரியாத ஒரு நபர் அழைத்து சென்றுவிட்டார். இது சம்பந்தமாக என் மகளை தேடி நான் தாதம்பட்டி பக்கத்தில் ஒரு ஊருக்கு சென்ற போது அங்கு கூட்டமாக இருந்தார்கள். சுமார் 50–60 நபர்கள் அங்கு இருந்தார்கள் , என் மகளை பார்த்த உடன் நான் மயக்கமாகி விழுந்துவிட்டேன் . என்னை யாரும் அடிக்கவில்லை. அதன்பிறகு தர்மபுரி ஜி .எச்–க்கு என்னை அழைத்து போனார்கள். மூன்று நாட்கள் கழித்து தான் எனக்கு மயக்கம் தெளிந்தது . போலீசார் வந்து என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கி சென்றார்கள்.

எதற்காக கையெழுத்து போட்டேன் என்ற விவரம் தெரியாது . புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான் . அந்த கையெழுத்து **EX.P.1** ஆகும். இந்த சம்பவம் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. நான் மயக்கம் போட்ட இடத்திற்கு நான் மட்டும் தான் போய் இருந்தேன் என்னுடன் யாரும் வரவில்லை . போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

போலீஸ் விசாரணையின் போது கடந்த 21.03.2019 அன்று காலை 10.00 மணிக்கு என்னுடைய மகள் மோனிகா வேலைக்கு போய்விட்டு வருவதாக போனவர் திரும்ப வீட்டுக்கு வரவில்லை என்றும் , இது சம்பந்தமாக விசாரித்தபொழுது மாவத்தூர் கிராமத்தை சேர்ந்த காந்தி மகன் தமிழரசன் என்பவர் அழைத்துச்சென்றதாக தெரியவந்தது என்றும் , இது சம்பந்தமான போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு வரும்படி சென்னதன்பேரில் நானும் , எங்கள் ஊரை சேர்ந்த மயில்சாமி, புவனேசன், கோவிந்தன், நாராயணசாமி, சரவணன், விஜயகுமார், சண்முகம், சத்தியமூர்த்தி, மணி, சம்பத், சக்கரவர்த்தி, விக்னேஷ் ஆகியோர் இரண்டு பொலிரோ வேனிலும், இரண்டு பிக்கப் வண்டியிலும் புறப்பட்டோம் என்றும் , அதன்பிறகு தொலைபேசியில் தகவல் வந்ததை அடித்து அங்கு போகாமல் 23.03.2019 அன்று மதியம் 2.00 மணிக்கு தமிழரசன் வீட்டிற்கு சென்றோம் என்றும், அப்பொழுது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றும், என்

மகள் மோனிகாவும் , தமிழரசனும் எங்கே என்று கேட்டபொழுது ஆஜர் எதிரிகள் தன் கையில் இருந்த பயங்கர ஆயுதங்களை கொண்டு எங்களை தாக்கினார்கள் என்றும் , இதில் எனக்கும் , சண்முகம், விஜயகுமார், சக்கரவர்த்தி ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் , நாங்கள் சென்ற ஹூண்டாய் சாண்ட்ரோ வாகனம் TN-02-6009 என்ற வாகனத்தையும். பொலிரோ மேக்ஸ் டிரக் வாகன்ம TN-29BU 7316 என்ற வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும் சேத மதிப்பு 3 இலட்சம் என்றும், அடிப்பட்ட நாங்கள் போச்சம்பள்ளி மருத்துவமனையில் பெட்டில் அனுமதிக்கப்பட்டோம் என்றும், இது சம்பந்தமாக நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் , இது சம்பந்தமாக எதிரிகளும் சமாதானமாகிவிட்டப்படியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு . என்னுடைய மகள் மோனிகா மாவத்தூரிலுள்ள காந்தி மகன் தமிழரசன் உடன் தான் தற்போது வாழ்ந்து வருகிறார் என்றால் சரி.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்தை நான் எங்கு வைத்து எப் பொழுது போட்டேன் என்று தெரியாது . புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாது.

**<u>மறுவிசாரணை: இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:52:08 +0530